Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 26

திங்கட்கிழமை
22 டிசெம்பர் 2025

மார்கழி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

## போதுமான எரிபொருள் கையிருப்பு!

கொழும்பு, டிசெ.22
தேசிய எரிபொருள் தேவையை நிறைவு செய்யும் வகையில் முறையான திட்டமிடல் மற்றும் இறக்குமதிகள் ஊடாக எரிபொருள் இருப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

»11

தையிட்டில் அமைக்கப்பட்டுள்ள

# சட்டவிரோத விகாரைக்கு எதிராக அமைதியாகப் போராடியோர் கைது





### பெருந்தொகைப் பொலிஸார் குவிப்பு

### போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்

**யாழ்ப்பாணம், டிசெ.22**

**சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை அகற்றக்கோரி நேற்று அமைதியான முறையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போராட்டத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு, அமைதியின்மை ஏற்படுத்தப்பட்டு மதத்தலைவர்களும், அரசியல்பிரமுகர்களும், கைது செய்யப்பட்டனர். பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.**

»11

## தையிட்டி விகாரைச் சிக்கலுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்

*அமைச்சர் சுனில் செனவி கூறுகின்றார்*



கொழும்பு, டிசெ.22
யாழ்ப்பாணம் தையிட்டி விகாரைப் பிரச்சினைக்கு, விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார விவகார அமைச்சர் சுனில் செனவி கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

»11

## தனக்குரிய பொறுப்பை நிறைவேற்றுகிறது அரசு

### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.22
அரசியலை செல்வத்தைக் குவிக்கும் தொழிலென்ற நிலையில் இருந்து, பொதுமக்களுக்கு சேவை செய்யும் சமூகப் பணியாக மாற்றுவதற்கு அரசாங்கம் தனது பொறுப்பை நிறைவேற்றுகின்றது என்று ஜனாதிபதி அநுர குமார திசா

»11

## வாள்வெட்டு சம்பவத்தில் 19 வயது இளைஞர் சாவு!

வவுனியா, டிசெ.22
வவுனியா, வீரபுரத்தில் நேற்று மாலை நடந்த வாள்வெட்டு சம்பவத்தில் வவுனியா தவசிகுளத்தை சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
தவசிகுளத்தைச் சேர்ந்த சேர்ந்த யோ. அபிசாந் (வயது-19) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.
இந்த இளைஞர் உட்பட சிலர் நேற்று மாலை வவுனி

»11

## பொலிஸ் திணைக்களத்துக்கு 75,000 சுவாச பகுப்பாய்வுக் கருவி

கொழும்பு, டிசெ.22
பொலிஸ்திணைக்களத்துக்கு 75 ஆயிரம் புதிய சுவாசப் பகுப்பாய்வுக் கருவிகள் கிடைத்துள்ளன என்றும், அவை தற்போது நாடு முழுவதும் உள்ள அனைத்து பொலிஸ் பிரிவுகளுக்கும் வழங்கப்படுகின்றது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஃப்.யு.வூட்லர் தெரிவித்துள்ளார்.
தேசிய மக்கள்

»11

## போதை விற்பனை மையமாக மாறிய பல்கலைக்கழகப்பீடம்

### பிரதமர் ஹரிணி வருத்தம்

கொழும்பு, டிசெ.22
போதைப்பொருள்களை விற்பனை செய்யும் மத்திய நிலையமாக பல்கலைக்கழகமொன்றின் பீடம் காணப்படுகின்றமை தொடர்பில் புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான செயற்பாடுகளும், பகிடிவதை என்ற பெயரில் இடம்பெறும் துன்புறுத்தல்களும் தடுக்கப்படா

»11

முச்சந்தி முரளி






### கட்டுப்பாட்டை இழந்ததால்

## மோட்டார்சைக்கிள் விபத்து; இளைஞர் ஸ்தலத்தில் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ.22
புத்தூர் பிரதேச சபைக்கு அருகில் நடந்த விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
ஆவரங்கால் கிழக்கு, புத்தூரைச் சேர்ந்த ஜெகநாதன் வினோஜன் (வயது -25) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.
மோட்டார்சைக்கிளில் இருவர் பயணித்த நிலையில், வீதி வளைவில் கட்டுப்பாட்டை இழந்து எதிரே

»11

*11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம்*

## ரவீந்திர விஜேகுணரத்ன விடுவிப்பு; சட்டமா அதிபரிடம் மேன்முறையீடு

கொழும்பு, டிசெ.22
கொழும்பு மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் 11 இளைஞர்கள் கப்பம் பெறுவதற்காகக் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய முன்னாள் பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவிடுவிக்கப்பட்டமைக்கு எதிராக சட்டமா அதிபரிடம் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கோட்டை நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.
இந்த விடுவிப்பு சட்டமா அதிபரால் மேற்கொள்ளப் பட்டுள்ளதால், இது தொடர்பாக

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4292 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 19 21 47 59 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1359 |
| வெற்றி இலக்கினம் | சிங்கம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 15 23 42 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0318 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 0 4 9 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2398 |
| ஆங்கில எழுத்து | P |
| சுப்பர் இலக்கம் | 04 |
| வெற்றி இலக்கங்கள் | 08 29 32 61 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6050 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 3 2 0 3 6 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2080 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 18 19 60 81 |
| விசேட எழுத்து | Y |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0166 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 25 31 34 |

# ரணில், சஜித் துருவங்கள் விரைவில் நேரடிச் சந்திப்பு

**கொழும்பு, டிசெ. 22**

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் விரைவில் நேரடிச் சந்திப்பு நடைபெறவுள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒன்றிணைந்து பயணிப்பது தொடர்பில் இறுதிமுடிவை எடுக்கும் வகையிலேயே இதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இரு கட்சிகளிலும் உள்ள மூத்த உறுப்பினர்களின் தலையீட்டையடுத்தே நேரடிச் சந்திப்புக்குரிய ஏற்பாடு இடம்பெற்றுவருவதாகத் தெரியவருகின்றது.

இணைந்து பயணிப்பது தொடர்பில் ஆராய்வதற்காக இரு கட்சிகளில் இருந்தும் பேச்சுக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. அக்குழுக்கள் சந்தித்து பலதடவைகள் பேச்சு நடத்தின.

இணைந்து பயணிக்கவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டாலும் தனிக்கட்சியாக இணைவதா அல்லது கூட்டணியாகச் செல்வதா என்பது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து அக்கட்சியின் தலைமைப் பதவியை சஜித் பிரேமதாஸ பெறவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுக்கூட்டணியாக ரணிலும், சஜித்தும் இணைத்தலைமைப் பதவி வகிக்கவேண்டும் என்ற மற்றுமொரு யோசனையும் உள்ளது.

'சஜித் தலைவர், ரணில் உயர்மட்ட ஆலோசனைத் தலைவர்' என்ற பரிந்துரையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே இவ்விவகாரம் தொடர்பில் இறுதியான - உறுதியான முடிவை எடுப்பதற்காக இரு கட்சிகளினதும் தலைவர்களை நேரடியாகச் சந்திக்க வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-44)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0758 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 4 4 8 2 7 6 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3024 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 23 29 37 67 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கம் | 32 50 61 68 |
| வெற்றி வாரம் | 5185 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0854 |
| வெற்றி இலக்கம் | 01 18 27 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| மீனம் | |
| வெற்றி இலக்கம் | 16 43 45 53 |
| சீட்டிழுப்பு வாரம் | 4736 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 27 |
| வெற்றி இலக்கம் | 07 31 48 66 |
| வெற்றி வாரம் | 2200 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 21.12.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 10 28 32 45 |
| வெற்றி வாரம் | 2850 |

## இ.தொ.கா.வில் நீங்கமாட்டேன்!

### ஜீவன் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.22

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விலகும் நோக்கம் இல்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் அறிவித்துள்ளார். இ.தொ.கா.வின் பொதுச்செயலாளர் பதவியை ஜீவன் தொண்டமான் விரைவில் இராஜினாமா செய்யவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகி இருந்த நிலையில் அவர் இதனை ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இ.தொ.கா. என்பது இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக எமது முன்னோர்களின் தியாகங்களினால் கட்டமைக்கப்பட்ட ஸ்தாபனமாகும். இதன் பொதுச்செயலாளர் என்றவகையில் என்னுடைய பொறுப்புகளில் இருந்து விலகுவது என்னுடைய நோக்கமல்ல. காலத்தின் தேவைக்கேற்ப ஸ்தாபனக் கட்டமைப்பில் சில மாற்றங்களைச் செய்யவேண்டியது அவசியமாகும். இது தொடர்பில் தவறான புரிதலுடன் சமூக ஊடகங்களில் பரப்பப்படும் தகவல்களை கவனத்திற்கொள்ள வேண்டியதில்லை. ஸ்தாபனத்தை ஜனநாயக முறையில் மேலும் வலுப்படுத்துவதே எமது நோக்கம். இதற்கமைய அடுத்த மூன்று மாதங்களுக்குள் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை கூட்டப்பட்டு தேவையான மாற்றங்கள் குறித்து தீர்மானிக்கப்படும் - என்றார். (ச-44)

## சீனாவின் மற்றொரு பிரதிநிதி இலங்கைக்கு நாளை வருகை

கொழும்பு, டிசெ. 22

சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிலையியல் குழுத் தலைவர் ஜாவோ லெஜி உயர்மட்ட சீனக்குழுவொன்றுடன் நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை வருகின்றார். சீனாவில் அந்நாட்டு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அடுத்தபடியாக அரசாங்கத்தின் மூன்றாவது முக்கியமான நபராக இவர் கருதப்படுகின்றார். இந்த விஜயத்தின்போது அவர் ஜனாதிபதி அநுரவைச் சந்திக்கவுள்ளதுடன் இலங்கை மீண்டெழுவதற்குரிய உதவித்திட்டங்களையும் அறிவிக்கவுள்ளார். அதேவேளை சீன தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுத் துணைத் தலைவர் வாங் டோங்மிங் கடந்த 16ஆம் திகதி இலங்கை வந்திருந்தார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் உள்ளிட்ட தரப்பினருடன் அவர் பேச்சுகளை நடத்தியிருந்தார்.

இதேவேளை இந்தியா தமது வெளிவிவகார அமைச்சரை அவசரமாக இன்று கொழும்புக்கு அனுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-44)

## மின்சாரவேலியில் சிக்கி இளைஞர் சாவு

கொழும்பு,டிசெ.22

அம்பாறை, தெஹியத்தகண்டிய - உத்தலபுர பகுதியில் மின்சாரவேலியில் சிக்கி இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் கலேன்பிந்துனுவெவ பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவர். இவர் காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காகச் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின்சாரவேலியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் தெஹியத்தகண்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## மக்களைப் பாதிக்கிறது முறையற்ற நிர்வாகம்

### நாமல் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 22

அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகத்தினால் மக்கள் கடும் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர். நிவாரண உதவிகள் முறையாக மக்களைச் சென்றடையவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் ஆபத்தில் இருக்கும்போது அவர்களுக்குத் துணையாக நிற்க அரசாங்கம் தவறிவிட்டது. இதனால் மக்கள் மத்தியில் ஆளுந்தரப்பு மீதான நம்பிக்கை சரிந்துள்ளது. அரசாங்க அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கிடையே முறையான ஒருங்கிணைப்பு இல்லை. பலத்த மழையினால் கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன, பாடசாலைகளுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நிவாரண உதவிகள் முறையாக மக்களைச் சென்றடையவில்லை. அரச அதிகாரிகள் அரசியல் அழுத்தங்களுக்கு அஞ்சிச் செயற்படவேண்டிய சூழல் உருவாகியுள்ளது. அரசாங்கம் வெறும் மேடைப் பேச்சுகளுடன் நின்றுவிடாமல், களத்துக்குச் சென்று மக்களின் உண்மையான பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு தீர்வுகளை வழங்க முன்வரவேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு தகவல்களைக் கசியவிட்ட அதிகாரிகள்!

## விசாரணைகள் ஆரம்பம்

**கொழும்பு,டிசெ.22**
**கடலில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் படகுகளைக் கண்காணிக்கும் உயர்தொழில்நுட்பத் தரவுகள் மற்றும் இரகசியத் தகவல்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு கசிந்துள்ளமை தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**


பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் நேரடி உத்தரவின் பேரில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கடலில் பயணிக்கும் பல நாள் மீன்பிடிப் படகுகளைக் கண்காணிக்கும் செயற்கைக்கோள் கண்காணிப்பு முறைமையின் தரவுகளே இவ்வாறு கசிந்துள்ளன. போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் புலனாய்வுப் பிரிவினரால் மட்டுமே கையாளப்படும் இந்த அமைப்பின் 'கடவுச்சொற்கள்' சில ஊழல்மிக்க அதிகாரிகளால் கடத்தல்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதன் காரணமாக, கடற்படையினரின் சுற்றிவளைப்புகள் இடம்பெறும் பகுதிகளை முன்கூட்டியே அறிந்துகொண்ட கடத்தல்காரர்கள், தமது படகுகளை நடுக்கடலில் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றியும், கண்காணிப்பு வளையங்களுக்கு வெளியே பயணித்தும் நீண்டகாலமாக தப்பிவந்துள்ளனர். இதனால் கடந்த காலங்களில் பல முற்றுகைகள் தோல்வியில் முடிந்துள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. அந்த வகையில் ஊழல் அதிகாரிகளை அகற்றி, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம் போதைப்பொருள் கடத்தலை முழுமையாகக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## போதைப்பொருள் சுற்றிவளைப்பு; 945 பேர் கைது

கொழும்பு, டிசெ. 22
நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் விநியோகத்தை முறியடிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் 'முழு நாடும் ஒன்றாக' தேசிய நடவடிக்கையின்கீழ், நேற்றுமுன்தினம் மாத்திரம் 945 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
கைதுசெய்யப்பட்டவர்களில் 16 சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக தடுப்புக்காவல் உத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.
17 சந்தேகநபர்கள் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்களிடம் இருந்து 637 கிராம் ஐஸ், 285 கிராம் ஹெரோய்ன், 3 கிலோ 432 கிராம் கஞ்சா செடிகள் மற்றும் ஏராளமான பிற போதைப்பொருள்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## மண்சரிவு ஆராய்வில் வெளிநாட்டுக்குழுக்கள்

மண்சரிவுக்குள்ளான பகுதிகளைச் சுற்றியுள்ள பாதுகாப்பற்ற மற்றும் வெடிப்பு ஏற்பட்டுள்ள பகுதிகளைக் கண்காணிக்க வெளிநாட்டு புவியியலாளர்கள் அடங்கிய மூன்று குழுக்கள் வந்துள்ளதாக தேசியகட்டட ஆராய்ச்சி அமைப்பின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
இத்தாலி, பிரான்ஸ் மற்றும் சீனாவிலிருந்து இந்தப் புவியியலாளர்கள் குழுக்கள் நாட்டுக்கு வந்துள்ளன.
நிலச்சரிவுக்கான ஆரம்ப அறிகுறிகளான வெடிப்பு மற்றும் விரிசல் அடைந்த பகுதிகளை அடையாளம் காண ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முதற்கட்ட ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு உள்ளிட்ட உள்ளூர் நிபுணர்களின் உதவியுடன் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெடிப்பு மற்றும் விரிசல் அடைந்த மலைகள், தாழ்நிலங்களில் ஏற்படும் சேதத்தைக் குறைக்கப் பொறியியல் முறைகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை இந்த ஆய்வுகளில் ஆராயப்படவுள்ளன. (ச-இ)



## குடிதண்ணீரில் அவதானம்!

கொழும்பு,டிசெ.22
குடிதண்ணீர் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு மருத்துவக் கலாநிதி வாசன் ரட்ணசிங்கம், பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
அனர்த்தத்தின் பின்னரான தற்போதைய சூழலில் குடிதண்ணீரில் கவனம் செலுத்த வேண்டும். குடிதண்ணீரை அருந்தும்போது வாந்தி, வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்கு மக்கள் முகங்கொடுக்கின்றனர்.
மக்கள் சுத்தமான நீரைப் பருகுவதையும், தமது அன்றாட வாழ்க்கையில் தூய நீரைப் பயன்படுத்துவதையும் உறுதிப்படுத்தவேண்டும்.
நீரைக் கொதிக்கவைத்து ஆறவைத்து எடுத்துக்கொள்வது சிறந்தது. நீரினால் பரவுகின்ற நோய்களை இதன் மூலம் கட்டுப்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நிவாரண நடவடிக்கைகளை கண்காணிப்பதற்குக் குழு

கொழும்பு, டிசெ. 22
அனர்த்த நிவாரண நடவடிக்கைகளின்போது அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட குழுக்களை நியமித்துள்ளது.
பேரிடரால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களுக்கும் இந்தக் குழுக்கள் நியமிக்கப்பட்டு, ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன்படி கண்டி, நுவரெலியா, குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களில் ஏற்கனவே முதற்கட்ட கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)




## எல்லாம் ஆமிமயம்!

கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான கதைமாதிரிப் போய்க்கொண்டிருக்குது திசைகாட்டிக்காரரின்ர ஆட்சி. எந்தக் கோத்தாபயவை ஆட்சியில இருந்து உந்தத் திசைகாட்டிக்காரர் கலைச்சினமோ அதே கோத்தாவின்ர வழியில தான் இவையும் போய்க்கொண்டிருக்கினம். கோத்தாபய பாதுகாப்புச் செயலரா இருந்ததால, கட்சிக்காரரை நம்பாமல், ஆமியில இருந்தவையைத்தான் கூட நம்பினவர். அதால எல்லாப் பெரிய பதவியளுக்கும் ஆமியிலையும், நேவியிலையும் இருந்தவையைத்தான் அவர் போட்டவர். இப்பிடி இலங்கையின்ர நிர்வாகத்தையே ஆமிமயப்படுத்த வெளிக்கிடேக்க, அவையள் எடுக்கிற தீர்மானங்களும் ஆமித்தனமா, சனங்களின்ர நன்மை தீமையைப் பாக்காமல் எடுபட்டது. அதில ஒண்டுதான் இரசாயன உரத்தை உடனடியாத் தடை செய்துபோட்டு, அதுக்குப் பதிலா எல்லாரும் இயற்கை உரத்தைப் பாவிக்கோணும் எண்ட தீர்மானம். உண்மையில அது நல்ல தீர்மானம்தான். நாட்டுக்கும், சனத்துக்கும்,நிலத்துக்கும் நன்மை பயக்கிற தீர்மானம். ஆனால் அதை எடுத்த எடுப்பிலேயே, உடனேயே எல்லாரும் பின்பற்றோணும் எண்டு ஆமித்தனமா யோசிச்சதாலதான் கோத்தா, ஜனாதிபதிப் பதவியை விட்டிட்டு ஓடவேண்டி வந்தது.

கோத்தா இப்பிடி சிவில் நிர்வாகத்துக்க ஆமிக்காரரை கொண்டுவரேக்க, திசைகாட்டிக்காரர் அதுக்கு எதிராக் கதைச்சவை, போராடினவை, பார்லிமெண்டில பேசினவை. ஆனால் இப்ப அவை என்ன செய்யினம்? போர்க்குற்றவாளியளைக்கூட சிவில் நிர்வாகத்துக்கையும், அரசாங்க உயர் பதவியளுக்கையும் கொண்டுவர வெளிக்கிட்டிருக்கினம். தென்னாபிரிக்கா, பாகிஸ்தானுக்கு தூதர்களா ஆமியில இருந்தவையைத்தான் போட்டிருக்கினம். கொழும்பில இருந்த II பெடியளை கடத்தி, திருகோணமலை நேவிக்காம்பில கொலை செய்த சம்பவத்தோட தொடர்புள்ள அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்கவை துறைமுக அதிகாரசபைக்குத் தலைவராப் போட்டிருக்கினம். போர்க்குற்றவாளியளில ஒருத்தரான மார்ஷல் சம்பத துயகொண்டாவை பாதுகாப்பு அமைச்சின்ர செயலாளராவும் இதே திசைகாட்டிக்காரர் தான் நியமிச்சிருக்கினம்.

இப்ப இன்னும் ஒருபடி மேலபோய், இலங்கையின்ர கணக்காய்வாளர் நாயகமாவும் கேணல் ராஜசிங்க எண்ட ஆமிக்காரரின்ர பேரை, அரசியலமைப்புப் பேரவைக்கு அறிவிச்சிருக்கிறார் அநுர. எல்லாத்தையும் ஆமிமயப்படுத்தின கோத்தாபயகூட, இந்தக் கணக்காய்வாளர் திணைக்களத்தில கைவைக்கேலை. ஏனெண்டால், எந்தத் திணைக்களத்தில என்னென்ன மோசடியள் நடக்குது எண்டு, ஆருக்கும் பயப்பிடமால், பக்கச்சார்பில்லாமல் இந்தத் திணைக்களம் சொல்லோணும். அப்பதான் அந்த மோசடியளைக் கண்டறிஞ்சு நடவடிக்கை எடுக்கலாம். ஆமி, நேவி எல்லாமே இந்தக் கணக்காய்வுத் திணைக்களத்துக்குப் பதில் சொல்லோணும். ஆமியில கனக்க ஊழல், தேவையில்லாத செலவுகள், தேவையில்லாத ஆளணி எண்டெல்லாம் இவ்வளவுநாளும் ஆமியைப் பற்றி கணக்காய்வாளர் திணைக்களம் சொல்லிக்கொண்டிருந்தது. இப்ப அதுக்குப் பெரியவரா ஒரு ஆமிக்காரரையே போட்டால் எப்பிடி இனிமேல் அவை ஆமியைப் பற்றிக் குறை சொல்லுவினம்? அதோட இந்த கேணல் ராஜசிங்க, ஆமியின்ர உள்ளகக் கணக்காய்வாளரா இருந்திருக்கிறார். அவருக்குப் பொதுவான கணக்காய்வு பற்றியோ, சிவில் நிதிச்சட்டம் பற்றியோ, மற்றத் திணைக்களங்களின்ர செயற்பாடுகள் பற்றியோ எதுவுமே தெரியாது. அதோட ஆமித் தளபதி சொன்னபடி கணக்குச் செய்த ஒருத்தரை இப்பிடி முக்கியமான பதவிக்குப் போட்டால், எப்பிடி அவர் சொந்தமா துணிச்சலா முடிவெடுப்பார்? பொருளாதார நெருக்கடியால மெல்ல மீண்டு, இப்ப டித்வா புயலால திரும்ப எல்லாத்தையும் முதலில இருந்து தொடங்கிற நேரத்தில இப்பிடி நாட்டை ஆமிமயமாக்கிறதுப் பேர்தான் மாற்றமோ?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## பொருளாதாரக் கணக்கெடுப்புக்கு கிராம அலுவலர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,டிசெ.22

நாட்டில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான முன்னாயத்த பொருளாதாரக் கணக்கெடுப்பு (2024-2025) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஆரம்பச் செயலமர்வு, தென்மராட்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள 60 கிராம உத்தியோகத்தர்களுக்கு நடத்தப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், பிரதேச செயலர் எவ்.சீ.சத்தியசோதி தலைமையில், நான்கு நாள்கள் பயிற்சிகள் வழங்கப்பட்டன. தென்மராட்சிப் பிரதேசத்தில் மீன்வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கால்நடைகள் வளர்ப்பு என்பன ஊக்குவிக்கப்பட்டு, மக்களால் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வளவாளர்களால் விளக்கமளிக்கப்பட்டன. (க-131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# தக்கன பிழைத்தல் தகாது...!

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளார். டித்வா புயலால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பில், இந்திய அரசின் அடுத்தகட்ட நிவாரண அறிவிப்புகளை வெளியிடுவதற்காகவும், மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடவும் அவர் வருகைதருகின்றார் என்று இந்தியத் தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ஆனால், ஜெய்சங்கரின் இலங்கைப் பயணம் பத்துடன் பதினொன்றாகக் கடந்துபோய்விடும் விடயமல்ல. இது உச்சக்கட்ட இராஜதந்திர நகர்வின் ஓரம்சம் என்றால், அது மிகையில்லை.

இலங்கையில் கடந்த இரண்டு வாரத்துக்குள், அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் உயர்மட்டப் பிரதானிகள் வருகை தந்துள்ளனர். ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம் இராஜதந்திர நகர்வுகளில் அனுபவ மற்றது என்றும், பலவீனமானது எனவும் முன் வைக்கப்படும் விமர்சனங்களுக்கு மத்தியில், வல்லாதிக்க சக்திகளை இலங்கை வரவேற்ற விதமும், அவர்களைக் கையாண்ட பாங்கும் மிகவும் அலாதியானது. ஜென்மத்துப் பகையாளிகளை ஒரே பந்தியில் அமரவைத்து -உறவு கொண்டாடி-நலம் விசாரித்து வழியனுப்பி வைப்பதென்பது ஒரு கலை. அந்தக் கலை அனைவருக்கும் வாய்க்காது. அதைத்தான் மிக நேர்த்தியாகவும் -இலாவகமாகவும் அண்மைய நாள்களாகச் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது அநுர அரசு. ஆனால், இதில் பாதிக்கப்படப்போவது என்னமோ நிச்சயம் தமிழர் தரப்பே.

ஆசியாவில் சீனாவின் ஆதிக்கம் சடுதியாக ஓங்கியுள்ளது என்பது வெளிப்டையானது. ஷேக் ஹசீனாவின் ஆட்சியின்கீழ், இந்தியாவுடன் ஒட்டிக்கொண்டிருந்த பங்களாதேஷ், மொகமட் யூனுஸின் ஆட்சியில் இந்தியாவை வெட்டி விட்டுள்ளது. இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் தற்போது நேரடிக் கருத்துமோதல்கள் இடம்பெற்று வருகின்றன. மாலைதீவும் இந்தியாவுடனான உறவுகளை மட்டுப்படுத்திவிட்டது. சீனாவின் செல்லப்பிள்ளையாக மாலைதீவு மெல்ல மெல்ல மாறிவருகின்றது. எனவே, இலங்கையை இறுகப்பிடித்தால் மட்டுமே பிராந்தியத்தில் தன்னை வலுப்படுத்தலாம் என்ற நிலைமை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. ஆதலால், தற்போதைய பிராந்தியச் சூழலுக்கு ஏற்ப 'இலங்கையைக் குளிர்விக்கும்'நடவடிக்கைகளிலேயே இந்தியா ஈடுபடும். அதைத்தாண்டி தமிழர்களின் இறைமை, தன்னாட்சி அதிகாரம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்றெல்லாம் இந்தியா ஆத்மார்த்தமாகச் சிந்திக்குமா? என்பது சந்தேகமே.


இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மிகச் சிறந்த இருதரப்பு உறவுகள் இருக்கவேண்டும். அதில் தவறென்று குறிப்பிடுவதற்கு எதுவும் இல்லை. நிலவழியாக எந்தவொரு நாட்டுடனும் தொடர்பற்றுள்ள இலங்கை, இந்தியா போன்ற நாட்டுடன் நட்பாயிருப்பதுதான் பல விடயங்களில் இலங்கைக்கு அனுகூலம் விளைவிக்கும். நாடு திவால் நிலையை அடைந்தபோதும், டித்வா பேரிடரின் போதும் அத்தகைய நட்பின் அவசியத்துக்கு நாம் அனைவரும் கண்கண்ட சாட்சிகளாக அமைந்தோம். ஆனால், அந்த நட்பின் ஆழத்தில், தமிழர்களின் வேணவாக்கள் அஸ்தமித்துப் போகாதிருப்பதை இந்தியா உறுதிப்படுத்தவேண்டும். அது தான் அழகும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

வெல்வோம், சாதிப்போம்,
வேதனைகளைத் துடைத்தெறிவோம்
எந்தை அருளால் எதுவும் வசமாகும்.

–அப்துல் கலாம்–




அனர்த்தப் பாதிப்பு

# மக்களின் உளநலமேம்பாடு; வேலைத்திட்டம் ஆரம்பம்!

**கொழும்பு, டிசெ. 22**

**'டித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களின் உளநலனை மேம்படுத்தும் நோக்கில் தொடங்கப்பட்ட 'Beyond Recovery' புதிய வேலைத்திட்டத்தின்கீழ் அரச அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்கான முதற்கட்டச் செயலமர்வு ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் அண்மையில் நடைபெற்றது.**

இந்தச் செயலமர்வின்கீழ், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 6 பிரதான மாவட்டங்களில் உளநலம் குறித்த புரிதல் உள்ள மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சித் திட்டங்கள் நாட்டின் மனநல நிபுணர்களால் நடத்தப்பட்டது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள பாதுகாப்பு மையங்களில் செயற்படுத்தப்பட வேண்டிய விஞ்ஞான வேலைத் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித் தொடர்கள் நடத்துதல் உட்பட உளவள ஆலோசனை வேலைத்திட்டங்களை உருவாக்குவது குறித்தும் திட்டமிடப்பட்டது. இந்தச் செயலமர்வில் பயிற்சி பெறும் அரச அதிகாரிகள், பாதுகாப்பு மையங்கள் ஊடாக அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் உள நலனை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பர். (ச-இ)



# யானை தாக்கி விவசாயி சாவு

கொழும்பு,டிசெ.22

அநுராதபுரம், தம்புத்தேகம, மலியதேவ்புர பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார்.


இவர் தனது விவசாய நிலத்தில் இருந்தபோதே இவ்வாறு காட்டுயானைத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மலியதேவபுர பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் யானையிடமிருந்து தப்புவதற்காக வீதியில் ஓடியபோதிலும், அவரைத் துரத்திச் சென்று யானை தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# நீர்க்குழியில் வீழ்ந்து குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 22

அரலகங்வில பொலிஸ் பிரிவின் கந்தேகம தம்மின்ன பகுதியில் உள்ள நீர் நிரம்பிய குழியில் விழுந்து 2 வயதுக் குழந்தை உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)



# குளவி கொட்டி ஒருவர் சாவு!

கொழும்பு, டிசெ. 22

தலத்துஓயா குருதெனிய பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி நபர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

மேலும் நான்கு பேர் காயமடைந்து தலத்து ஓயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர் குருதெனிய பகுதியைச் சேர்ந்த 73 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



# 36 நீர்த்தேக்கங்கள் தொடர் வான்பாய்வு

கொழும்பு, டிசெ. 22

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிர்வாகத்தின்கீழ் உள்ள 73 பிரதான குளங்களில் 36 நீர்த்தேக்கங்கள் தொடர்ந்தும் வான்பாய்ந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, நடுத்தர அளவிலான சுமார் 52 குளங்களும் வான் பாய்ந்து வருகின்றன. இந்த வான் பாய்தல் காரணமாக வெள்ள நிலைமையோ அல்லது அத்தகைய நிலைக்கு நீர் வெளியேற்றப்படுவதோ இடம் பெறாது என்றும், இதன் காரணமாக பொதுமக்கள் மத்தியில் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

**நாளை**

செவ்வாய்க்கிழமை - மார்கழி 08

23.12.2025

சுபநேரம் : 10.55 - 12.25

ராகுகாலம் : 03.25 - 04.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்வடிவம் பெறாத பிரேரணைகள்; சாவகச்சேரிப் பிரதேசசபை அசண்டை!

## உறுப்பினர் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம்,டிசெ.22**
**சாவகச்சேரி பிரதேசசபை ஆரம்பிக்கப்பட்டு இதுவரையான காலப்பகுதியில் பல கோரிக்கைகளும் பிரேரணைகளும் சபையில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டபோதும் செயற்படுத்தப் படாமல் காலநீடிப்புச் செய்யப்பட்டு வருகின்றது என்று சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் சிவ பாதம் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இறுதி வாக் கெடுப்பு அமர்வில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

பிரதேசசபையின் 2026 ஆம் ஆண் டுக்கான பட்ஜெட் இறுதி வாக்கெடுப்பு அமர்வில் அவர் இதனைக் குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கைதடி கிராமசபை இருந்த காணி யில் அமைந்திருந்த கைதடி உபபணி மனைக் கட்டடம் பழுதடைந்து காணப்படும் நிலையில் அதனை அகற்றி புதிய கட்டடம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதி நிலையான வைப் பில் பல ஆண்டுகளாக வைப்பிலிடப் பட்டுள்ளது. இந்தக் கட்டம் உடனடி யாக இடித்து அகற்றப்பட்டு புதிய கட்ட டம் அமைக்கப்படவேண்டும் என சபையின் முதலாவது கூட்டத்தில் தீர்மானமாகவும்நிறைவேற்றப்பட்டி ருந்தது. ஆனால் இன்று வரை அது செயற்படுத்தப்படவில்லை.

அதேவேளை கைதடியிலிருந்து நிலத் தடிநீர் வணிக நோக்கத்துக்காக வெளியிடங்களுக்கு எடுத்துச்செல் வது முற்றாகத் தடைசெய்வது என பிரதேசசபையில் ஏகமனதாக எடுக் கப்பட்ட தீர்மானம் இன்று வரை வர்த்த மானியில் பிரசுரிக்கவுமில்லை. பத் திரிகைகளில் அறிவிக்கவும் இல்லை. இந்தத் தீர்மானங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்- என்றார். (சு-159)

# கடைகள் ஏல விற்பனை: குவிந்தது அதிக வருவாய்

## மன்னார் நகரசபை தெரிவிப்பு



மன்னார், டிசெ. 22
மன்னார் நகர எல்லைக்குள் பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைகளுக்காக நடத் தப்பட்ட கடைகள் ஏல விற் பனை மூலம் நகரசபைக்கு மிகப்பெரிய வருமானம் கிடைத்துள்ளதாக தவிசாளர் அன்ரனி டேனியல் வசந் தன் தெரிவித்துள்ளார்.

இதுவரை 339 கடைகள் ஏலம் விடப்பட்ட நிலையில் 284 கடைகள் ஊடாக 4 கோடியே 85 இலட்சத்து 866 ரூபா கிடைக்கப்பெற்றுள்ளது. மீதமுள்ள கடைகளின் ஏலம் மூலம் மொத்த வருமானம் மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதார நெருக்கடி மற்றும் அனர்த்த நிலைகளுக்கு மத்தியில், இந்த ஆண்டு கடைகள் ஏலம் போகாது எனக் கருதப்பட்ட சூழலில் மிகப்பெரும் தொகைக்கு ஏலம் விடப்பட்டமை சாதனையாகும். இந்த வருமானத்தைக் கொண்டு 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக, மன்னார் நகர எல்லைக்குள் வாழும் மக்களின் அடிப் படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், பல்வேறு அபி விருத்திப் பணிகளை முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள் ளது என்றும் தவிசாளர் குறிப்பிட்டார். (ச-213)

# ஆயிரக்கணக்கானோரைநாடு கடத்தியது கனடா!

ஒட்டாவா,டிசெ.22
கனடா அரசு 2025ஆம் ஆண்டில் 19ஆயி ரம் புலம்பெயர்ந்தோரை நாடுகடத்தியதாக அதிகாரபூர்வத் தகவல்கள் தெரிவிக்கின் றன. 2023இல் கனடா 15,207 பேரை யும், 2024இல் 17,357 பேரையும் நாடுக டத்தியுள்ளது.

கடுமையான விசாகட்டுப்பாடுகளால், கன டாவுக்கு சட்டப்படி வரும் வெளிநாட்டவர்கள் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து வரு கிறது. 1971ஆம் ஆண்டுக்குப் பின் தற்கா லிகக் குடியிருப்போர் எண்ணிக்கை தற்போது கணிசமாகக் குறைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

பணியாளர்கள் தேவை

நவாலியில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப் படுகின்றனர்.
- இயந்திரம் இயக்குபவர்
(அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ள முடியும்).
- காசாளர் (பெண்)

தொடர்புகளுக்கு : 076 3010 115
(CS 30945) A

பாராட்டி வாழ்த்துதலும் சேவை நயத்தலும்



எமது பாடசாலையில் நீண்ட காலம் ஆசிரியராகவும் உப அதிபராகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய
திருமதி
மைதிலி தேவராஜா
அவர்கள் ஆசிரிய கல்வியியலாளர் சேவைப் பரீட்சையில் சித்தி பெற்று விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ளார். அவர் எமது பாடசாலையில் ஆற்றிய அளப்பெரிய சேவையைப் பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற வாழ்த்தி நிற்கின்றோம்.
அதிபர், பிரதி அதிபர் , ஆசிரியர்கள்
கல்விசாரா ஊழியர்கள்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

சேவை நலன் பாராட்டு



Congratulations
எமது பாடசாலையின் , ஆசிரியரான
திருமதி. திருமகள் கண்ணதாசன்
அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும்,
உயர்சாதனைகளுக்கும் அர்ப்பணிப்புடன் நீண்டகாலம் எம்முடன் இணைந்து பணி யாற்றியமைக்கு பாராட்டி நன்றி கூறி வாழ்த்துவதுடன் , சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழவும் ஓய்வு காலம் மகிழ்வுடன் சிறக்கவும் என்றென்றும் வாழ்த்துகின்றோம்.
அதிபர், பிரதி அதிபர் , ஆசிரியர்கள்
கல்விசாரா ஊழியர்கள்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்

சேவை நலன் பாராட்டு



Congratulations
எமது பாடசாலையின் , ஆசிரியரான
செல்வி. மரிய அஞ்சலா சூசைப்பிள்ளை
அவர்கள் எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும்,
உயர்சாதனைகளுக்கும் அர்ப்பணிப்புடன் நீண்டகாலம் எம்முடன் இணைந்து பணி யாற்றியமைக்கு பாராட்டி நன்றி கூறி வாழ்த்துவதுடன் , சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழவும் ஓய்வு காலம் மகிழ்வுடன் சிறக்கவும் என்றென்றும் வாழ்த்துகின்றோம்.
அதிபர், பிரதி அதிபர் , ஆசிரியர்கள்
கல்விசாரா ஊழியர்கள்
யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்

மாபெரும் மலிவு விற்பனை!

300 000 /= மேற்பட்ட கொள்வனவுகளுக்கு இலவச விநியோகம் மற்றும் பெறுமதியான வீட்டு மின் உபகரணப் பொருட்கள் பரிசாக வழங்கப்படும்.

நத்தார் புதுவருட மற்றும் தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு
இலங்கையின் முன்னனி வர்ணப்பூச்சுக்களுக்கு 60% வரையான நம்பமுடியாத விலைக்கழிவுகளும் பரிசுப்பொருட்களும்

All Interior Items - 60% Discount
B.White 20L - Rs 13560 இல் இருந்து
Wall Filler 20L - Rs 5100 இல் இருந்து
All Other Items - 50% Discount



இன்றே விரையுங்கள்!
Green Home Suppliers & H/W
பருத்தித்துறை வீதி, மந்திகை
077 440 8186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவுடன்கைதானவருக்கு தடுப்புக்காவல்

யாழ்ப்பாணம், டிசெ. 22
பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலோலிப் பகுதியில் 182 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரைத் தடுத்துவைத்து விசாரணை செய்வதற்கு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. நெல்லியடியில் உள்ள புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய கடந்த வியாழக்கிழமை புலோலி தெற்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்று நெல்லியடிப் பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது. இதன்போது அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த 182 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. அத்துடன் 30 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியபோது சந்தேகநபரை 23ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு கட்டளை வழங்கியுள்ளது. (ச-100)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1960



மறைவு 18 . 12 . 2025

கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் ரொரன்றோ கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### துரைராஜா இராஜதுரை (சந்திரன்)

அவர்கள் 18.12.2025 வியாழக்கிழமை அகால மரணடைந்த செய்தியறிந்து மிகுந்த துயரமடைவதுடன் அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்
077 612 3064

கு.கனகலிங்கம்
க.சசிகுமார், க.கிரிதரன்
குடும்பத்தினர்

(CS 60238) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 03 . 1978



மறைவு 17 . 12 . 2025

### பேரின்பநாதன் அரிகரன்

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ். ஆறுகால்மடம் மற்றும் கனடாவினை வதிவிடமாகவும் கொண்ட அமரர் திரு.பேரின்பநாதன் அரிகரன் அவர்கள் 17.12.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2025) திங்கட்கிழமை கனடா நேரம் காலை 10.00 - மதியம் 1.00 மணி வரை இலக்கம் 121 சிற்றிவியூ றைவ்வில் அமைந்துள்ள லோட்டஸ் மலர்சாலையில் (கனடா) நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 10 . 1943



மறைவு 20 . 12 . 2025

### வல்லிபுரம் மகேஸ்வரி

சாவகச்சேரி சரசாலை வடக்கினை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகேஸ்வரி அவர்கள் நேற்று முன்தினம் 20.12.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - செல்லாச்சி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - நாகமுத்து தம்பதியரினரின் அன்பு மருமகளும், வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் சிவபாதம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பாலகுமாரி, பாலபுலேந்திரன் (ஜேர்மனி), பாலச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி, குமுதலோஜினி (ஜேர்மனி), நிரஞ்சனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌரிசன் (ஜேர்மனி), துஷாந் (ஜேர்மனி), ரதீப் (லண்டன்), சாதனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.12.2025) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி

தகவல்: குடும்பத்தினர்
[illegible]

(CR 46751) E

நடமாடும் வீட்டில் படமாகிப்போன எம் இதய தெய்வத்தின்

## 20 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை அரவணைப்பில் 23.02.1951

ஆண்டவன் அரவணைப்பில் 02.01.2006

திதி: வளர்பிறை திருதியை (22.12.2025)

### திருமதி ஜெகதாம்பிகை தெட்சணாமூர்த்தி

ஈர் பத்து ஆண்டுகள் மறைந்து உருண்டாலும்
உங்கள் உயிர் மூச்சு மறையவில்லையே
ஆயிரம் ஆயிரம் யுகங்கள் ஒழிந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒழிவதில்லை தாயே!
தலைமகளே எங்கள் தவப்பயன் நீயே அம்மா!
வையகம் போற்ற வாழ்ந்து வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து பழதில்லா புதுமலராய்
என்றும் எம் இதயங்களில் மணம் வீசிய அன்புநிறை அம்மாவே!
இருபது ஆண்டுகளானதே உங்களைப் பிரிந்து
தேயாமல் வளருமிது தெய்வீக அன்பு
இயற்கையின் அசைவுகளில் உங்கள் உணர்வுகளை நுகர்ந்து
உங்கள் பாதங்களுக்கு மலர்தூவி வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல 110, சீனிவாசகம் வீதி,
[illegible]

உங்கள் பிரிவால் நினைவில் தவிக்கும்
பிள்ளைகள் மற்றும்
மருமகள்மார், பேரப்பிள்ளைகள்

(CS 30942) E

## டில்லியில் பனிமூட்டம்


புதுடில்லி, டிசெ.22
இந்தியத் தலைநகர் டில்லியில் குளிர்காலத்தில் காற்றுமாசு அதிகரித்ததையடுத்து 228 விமானசேவைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டில்லியில் பல்வேறு பகுதிகளிலும் காற்றுமாசு காரணமாக பனிப் போர்வை போர்த்தியது போல் காட்சி அளிக்கிறது. இதனால் காலையிலேயே வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டபடியே செல்லும் நிலை உருவாகியுள்ளதோடு மேலும் பல பகுதிகளிலும் காலையிலேயே பனிமூட்டமும் அதிகரித்துள்ளது. டில்லியில் பனி அடர்ந்த சூழலால், தெளிவற்ற வானிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக டெல்லி விமானநிலையத்தில், 131 விமானங்களின் புறப்பாடு மற்றும் 97 விமானங்களின் வருகை என எயார் இந்தியா, இண்டிகோ உள்ளிட்ட பல்வேறு விமான நிறுவனங்களின் 228 விமானசேவைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வெள்ள அனர்த்தம் காரணமாக வெள்ளநீர் உட்புகுந்த கிளிநொச்சி தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலயத்தை சுத்தம் செய்யும் பணி கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. இதில் இராணுவத்தினர், விமானப்படையினர், பிரதேச மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-41-113)



டித்வா புயலின் தாக்கத்தால் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் பெரிதும் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட 63 குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 52 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உலருணவுப் பொதிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.
தேராவில், இளங்கோபுரம், மாணிக்கபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உணவுப்பொதிகளை வழங்கினார். (எ-41-66)

**இந்திராபுரத்தில்**

## குளம் தரவையாக மாறியதால் 15 வீடுகள் வெள்ளத்தில் மிதப்பு


யாழ்ப்பாணம்,டிசெ.22

பளை இந்திராபுரம் கிராமத்திலுள்ள குளம் தூர்ந்து தரவையாக மாறியதால் அண்மையில் பெய்த பெருமழையில் வெள்ளம் கிராமங்களுக்குள் புகுந்துள்ளது.
இதனால் அங்குள்ள 15 க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் ஆலயம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.
2000 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தக் குளத்தை நம்பி பல குடும்பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டனர். எனினும் 2020 ஆம் ஆண்டு மீள்குடியமர்வு இடம்பெற்ற வேளையில், குளம் தூர்ந்து தரவையாக மாறியிருந்தது. இந்தக் குளத்தைப் புனரமைக்குமாறு பொது அமைப்புகளும், விவசாயிகளும் பிரதேச செயலகம் மற்றும் விவசாயத் திணைக்களம் போன்றவற்றுக்கு பல தடவைகள் முறையிட்டும் குளம் புனரமைக்கப்படவில்லை.
இதனால் வெள்ளநீர் அயலில் உள்ள குடியிருப்புகளைச் சென்றடைகின்றன என்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (க-9)

மாவிட்டபுரம் இந்துமயானத்தை அபிவிருத்தி செய்வதற்கான முதற்கட்டப்பணிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. மாவை.பாரதி சனசமூக நிலையத்தின் நிதியனுசரணையில் இப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான அடிக்கல்லை வலி. வடக்குப் பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் நட்டார். (எ-41-17)








பளை வேம்பொடு கேணி சீ.சீ.த.க. பாடசாலைக்கு புலம்பெயர் நாட்டில் வதியும் நலன்விரும்பியினால் கணினி, கணினி மேசை, கணினி நாற்காலி என்பன கடந்த புதன்கிழமை வியாழக்கிழமை வழங்கப்பட்டன. (ச-41-9)

வலிகாமம் வடக்குப் பிரதேசசபையும், வடக்கு மாகாண சுற்றுலாத்துறைத் திணைக்களமும் இணைந்து, சுற்றுலாப்பயணிகளுடன் தொடர்புடைய வாகனச் சாரதிகளுக்கான பயிற்சி நெறியை அண்மையில் நடத்தின. (க-17)



டித்வா புயலால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகரசபையில் பணியாற்றும் சாரதிகள், தூய்மைப்பணியாளர்கள் 30 பேருக்கு, ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன. (க-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் ஊற்றெடுக்கும். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சிதரும். தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் குறையும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். தாய்வழி உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**மிதுனம்:** மகிழ்ச்சியான நாள். துணிச்சலுடன் முடிவெடுப்பீர்கள். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். பிள்ளைகள்வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பெரிய பாதிப்பு எதுவுமிருக்காது. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்கு மேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. வெளியிடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளின் உடல்நலனில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்படும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**துலாம்:** மனதில் குழப்பங்கள் நீங்கி உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** இன்று புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சகோதரர்களுக்காக செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண்விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்குமேல் மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர்ச்செலவுகளும் ஏற்பட்டு திணற வைக்கும். காரியங்கள் முடிவதில் இருந்து வந்த இழுபறி நிலை மாறி, அனுகூலமாகமுடியும். வெளியூர்ப்பயணம் தவிர்க்கவும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத் துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு சகோதரர்களால் எதிர்பாராத செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு நவீன டிசைனில் புதிய ஆடைகளை வாங்கும் யோகம் ஏற்படும்.




டித்வா புயலால் சேதமடைந்த, கிளிநொச்சி ஏ -35 பிரதான வீதி 11 ஆம் மைக் கல் பகுதியில் அமைந்துள்ள பிரதான பாலப்புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளன. இதனை யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத்தூதரகத்தின் துணைத் தூதுவர் சாய் முரளி பார்வையிட்டார். இந்திய, இலங்கை இராணுவத்தினர் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் இணைந்து பாலத்தின் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-113)

## கரோல் போட்டி முடிவுகள்

மன்னார்,டிசெ.22
மன்னார் கலையருவியின், 2025ஆம் ஆண்டுக்கான கரோல் பாடல்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைவாக கீழ்ப் பிரிவில் முதலாம் இடத்தை பேசாலைப் பங்கும், இரண்டாம் இடத்தை ஜோசேவ் வாஸ் நகர் பங்கும், மூன்றாம் இடத்தை மன்னார் பேராலயப் பங்கும் பெற்றுள்ளன.
மேற்பிரிவில் முதலாம் இடத்தை ஜோசேவ் வாஸ் நகர் பங்கும், இரண்டாம் இடத்தை மகாறம்பைக்குளம் பங்கும், மூன்றாம் இடத்தை பேசாலைப் பங்கும் பெற்றுள்ளன. (க-60)

### வீதி சீரின்மையால்


## மழைவெள்ளத்தில் இறுதி ஊர்வலம்!



யாழ்ப்பாணம்,டிசெ.22
யாழ்ப்பாணம் நாகர்கோவில் கிழக்கில் உயிரிழந்த ஒருவரின் இறுதி ஊர்வலம் சுமார் இரண்டடி மழை வெள்ளத்தினூடாக நடந்துள்ளது. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.
வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மேற்கு மயானத்துக்கான வீதியின்மையாலும் மயானத்துக்குக் கொட்டகை இன்மையாலும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தநிலையில் உயிரிழந்த ஒருவரது உடல் மழை வெள்ளத்தினூடாக எடுத்துச் செல்லப்பட்டு மயானத்தின் வெறும் தரையில் தகனம் செய்யப்பட்டது.
குறித்த மயானத்துக்கான வீதி மற்றும் மயானத்துக்கான கொட்டகை அமைத்துத் தர உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-66,100)

## ஈழத்துச் சிதம்பரம் நோக்கி ஆன்மிகப் பாதயாத்திரை

திருவெம்பாவை விரதத்தை முன்னிட்டு அகில இலங்கை சைவமகாசபையின் வருடாந்த ஈழத்துச் சிதம்பரம் நோக்கிய ஆன்மிகப் பாதயாத்திரை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மாதகல் சம்புநாத ஈச்சரர் முன்றலில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.
இந்தப் பாதயாத்திரை பல்வேறு இந்து ஆலயங்களைத் தரிசித்தவாறு சுழிபுரம், மூளாய், பொன்னாலை ஊடாக காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தைச் சென்றடையும்.
பாதயாத்திரை செல்லும் வீதிகளைத்துப்புரவுசெய்து, மாவிலை, தோரணங்கள் கட்டி, அலங்காரம் செய்து பாதயாத்திரையை வரவேற்பதுடன் பாதயாத்திரையில் சைவமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவமகா சபையினர் அறிவித்துள்ளனர். (ச-41-66)



பளை இந்திராபுரம் கிராம மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஜீ.தமிழ்ஸ் போக்கஸ் என்ற அமைப்பின் சார்பாக க.தமிழழகன் என்பவரின் நிதிப்பங்களிப்பில் இந்தக் கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (ச-9)



பளை மத்திய கல்லூரி மாணவர்களுக்கு சிறந்த நடத்தை மற்றும் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. பளை பொலிஸ்நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் இணைந்து நடத்திய கருத்தரங்கில் கல்லூரி அதிபர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ்.மாவட்டச் செயலகமும் வேலணைப் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய நடமாடும் சேவை பிரதேச செயலக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. பிரதேச செயலாளர் தனபாலசிங்கம் அகிலன் தலைமையில் நடைபெற்ற சேவையில் யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் கலந்து கொண்டார். இதில் காணி உறுதிப்பத்திரம், கடற்றொழில் உபகரணங்கள், முதியவர்களுக் கான சக்கர நாற்காலி, தென்னங்கன்றுகள் என்பன இலவசமாக வழங்கப்பட்டன. (ச-41-9)





# சீமாட்டி இராமநாதனின் திருவுருவச்சிலை திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.22
யாழ். இராமநாதன் கல்லூரியின் நிறுவுநர் தினமும், வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் யாழ்.சுன்னாகத்தில் அமைந்துள்ள கல்லூரியின் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.
கல்லூரியின் அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.
கல்லூரியின் முகாமையாளராகவும் அதிபராகவும் நீண்டகாலம் அரும்சேவையாற்றிய சீமாட்டி இராமநாதனின் திருவுருவச்சிலை வடமாகாண ஆளுநரால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. அத்துடன் 'கர்மயோகி சீமாட்டி இராமநாதன்' எனும் சிறப்புநூலும் வெளியிடப்பட்டது. (ச-41-66)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்துபாலன் பிறப்பை முன்னிட்டு அண்மையில் ஏற்பட்ட பேரிடர் பாதிப்புத் தொடர்பான பிரார்த்தனையும் விழிப்புணர்வும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-41-9)

# கண்டற்தாவர நடுகை முன்னாயத்தப் பயிற்சி



கிளிநொச்சி, டிசெ.22
எச்.டி.ஓ.நிறுவனத்தினால் 2026ஆம் ஆண்டில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கண்டற்தாவர நடுகை மற்றும் பராமரிப்புச் செயற்றிட்டத்தின் முன்னாயத்தப் பயிற்சி பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலக மாநா ட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. உதவிப் பிரதேச செயலாளரின் பங்குபற்றலுடன் கிராம அலுவலர்கள், சமூக மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. (ச-41-9)



வேலணைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 139 சமுர்த்திப் பயனாளிகளுக்கு 20.85 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள வாழ்வாதார வேலைத்திட்டத்தின்கீழ் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-41-9)

# மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 10 . 1964



இறப்பு 20 . 12 . 2025

## திருமதி வனதராணி ஶ்ரீரவீந்திரா (வனஜா)

மறவன்புலோவை பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வனதராணி ஶ்ரீரவீந்திரா (வனஜா) அவர்கள் கடந்த (20.12.2025) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஶ்ரீரவீந்திரா (பெரதேனியா பற்சிகிச்சை நிலையம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், சரணிஜா (வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை), லக்ஷியன் (பல் மருத்துவ மாணவன், இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவநேசன் (பிரான்ஸ்), சுபநேசன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2025) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது மூளாய் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.

மூளாய்.
சுழிபுரம்.

கணவர் - 077 3095 924
மகள் - 077 3300 241

CS 30934 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத...

வலி.வடக்கு தையிட்டியில் பொதுமக்களின் காணிகளை அடாத்தாகப் பிடித்து விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள அந்த விகாரையை அகற்றித் தங்களின் காணிகளை மீள வழங்கவேண்டும் என்று காணிகளின் உரிமையாளர்களும், சட்டவிரோதமாக தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள இந்த விகாரையை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்திப் பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர், தையிட்டி விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று கூறியிருந்தது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஓராண்டுக்கு மேலாகியுள்ளபோதும், தையிட்டி சட்டவிரோத விகாரை தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆனாலும் சட்டவிரோத விகாரைக்கு எதிராகத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். இந்தநிலையில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள அந்த விகாரையின் விகாராதிபதிக்கு பௌத்த கட்டமைப்பின் கூடுதலான அதிகாரங்களை வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின் தோட்டை நந்தாராம தேருக்கு, பௌத்த கட்டமைப்பின் உயரிய அதிகாரங்களை வழங்குவதற்கு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை அமர்வில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன், உறுப்பினர்களால் போராட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

பௌத்த மரபுகளின் அடிப்படையில், இலங்கையின் மாபெரும் வம்சங்களில் ஒன்றாக அறியப்படும் அமரபுர ஸ்ரீ கல்யான வம்ச குழுவின் வடஇலங்கை தலைமைச் சங்கநாயகராக தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி தெரிவாகியுள்ளார். அவரிடம் அதிகாரங்களைக் கையளிக்கும் நிகழ்வு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித், புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பில் வலி.வடக்கு சபை அமர்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஜின் தோட்டை நந்தாராம தேரரிடம் அதிகாரங்களைக் குவிப்பதற்கு சபையால் கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் ப.சாருஜன் முன்மொழிவைச் சமர்ப்பித்தார். இந்த முன்மொழிவு ஏகமனதாக ஏற்கப்பட்டு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை திஸ்ஸ விகாரைக்கு முன்பாகப் போராட்டம் நடத்தவும் திட்டமிடப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்கு எதிராகப் பொலிஸார் நீதிமன்றத் தடையுத்தரவு ஒன்றைப் பெற்றிருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகள் உட்பட 29 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு பொலிஸார் நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்றிருந்தனர். நேற்றுக்காலை போராட்டம் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டபோது, விகாரையை அண்மித்த பகுதிகளில் பெரும் எண்ணிக்கையான கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டனர். அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுத்தவர்களுடன் பொலிஸார் முரண்பட்டு, அங்கு அமைதியின்மையை ஏற்படுத்தினர்.

இது ஒரு அமைதி வழியான போராட்டம். எந்த விதத்திலும் பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கப்படவில்லை. விகாரைக்குள் செல்லவோ, விகாரைக்கு சேதம் விளைவிக்கவோ போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முயற்சிக்கவில்லை. விகாரைக்குச் செல்லும் வீதியை எவ்வாறு அடாத்தாக தடை செய்திருக்கின்றீர்கள்? என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

ஆனால் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கடும்போக்குடன் நடந்துகொண்ட பொலிஸார், வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ், வேலன் சுவாமிகள், வலி.வடக்கு பிரதேச சபையின் உறுப்பினர்களான ப.சாருஜன், பிரபாகரன் என ஐவரைக் கைது செய்தனர். ஆயினும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, வீதியின் குறுக்காக அமர்ந்து போராட்டத்தைத் தொடர்ந்தனர். போராட்டத்தை நிறுத்தி அங்கிருந்த கலைந்து சென்றால், கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்ததை அடுத்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து அகன்றனர்.

ஆயினும் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்காமல், மல்லாகம் நீதவான் நீதிமன்றில் அவர்களைப் பொலிஸார் முற்படுத்தினர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட ஐவரையும் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது. (அ-எ-26)

## தையிட்டி...

தையிட்டி விகாரையை அகற்றக்கோரியும், சட்டவிரோதமாக அமைக்கப்படும் விகாரையின் விகாராதிபதிக்கு வழங்கப்படும் பதவி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்று அமைச்சரிடம் வினவியபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

தையிட்டி திஸ்ஸ விகாரை பிரச்சினைக்கு விரைவில் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விகாராதிபதிக்கு பௌத்த கலாசாரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சான்றிதழே வழங்கப்படுகின்றது. அது பாடசாலை போன்ற இடங்களில் வழங்கப்படுவது போன்ற பதவி உயர்வு அல்ல.

தையிட்டி விகாரை பிரச்சினையையும், விகாராதிபதிக்கு வழங்கப்படும் சான்றிதழ் நிகழ்வையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த வேண்டாம். தையிட்டி விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக தமது அமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அளவீடுகளை முன்னெடுத்துள்ளது.

விகாரைக்குச் சொந்தமான காணிகளை விகாரைக்கு வழங்குவதற்கும் ஏனைய காணிகளை உரிய மக்களிடம் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துவருகின்றது - என்றார். (அ-எ-இ)

## போதை...

விட்டால் பல்கலைக்கழக கட்டமைப்பை பாதுகாக்க முடியாது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

2025ஆம் ஆண்டிலும் பகிடிவதை தொடர்பாகப் பேசிக்கொண்டிருப்பது உண்மையில் கவலைக்குரிய விடயமாகும். பல்கலைக்கழக கலாசாரமொன்றை பேணிச் செல்வதற்கு பகிடிவதை தேவை என்று எண்ணினால், அது பாரதூரமான பிரச்சினையாகும். உபவேந்தர் முதல் அலுவலக உத்தியோகத்தர்கள் வரை யாரைக் கேட்டாலும் தமது பல்கலைக்கழகத்தில் பகிடிவதை இல்லை என்கின்றனர். ஆனால் மாணவர்கள் உயிரிழக்கின்றனர். பல்கலைக்கழகத்தை விட்டு இடை விலகுகின்றனர். இவை யாருக்கும் தெரியவில்லையா?

தற்போது பதிவாகும் சம்பவங்களை தொடர்ந்தும் பகிடிவதை என்று கூட விளிக்க முடியாது. அவை பகிடிவதைகளுக்கு அப்பாற்பட்ட கொடூரமான வன்முறைகளும், துன்புறுத்தல்களுக்கும் சமூகத்தில் மிகவும் கீழ் மட்டத்திலிருந்து பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் இங்கு வரும் மாணவர்களே அதிகளவில் இந்த துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றனர். இதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் எமது தலையீடு அத்தியாவசியமானதாகும். போதைப்பொருட்களை விற்பனை செய்யும் மத்திய நிலையமாக பல்கலைக்கழக பீடமொன்று காணப்படுகின்றமை தொடர்பில் எமக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. பெயர் உள்ளிட்டவற்றுடன் இந்த தகவல்கள் கிடைத்துள்ளன. இவற்றை உடனடியாகக் கட்டுப்படுத்த முடியாவிட்டால், எம்மால் இந்த பல்கலைக்கழக கட்டமைப்பை பாதுகாக்க முடியாது. பகிடிவதை என்ற பெயரில் அரங்கேறும் துன்புறுத்தல்களை இல்லாதொழிக்கவும், போதைப்பொருள் பாவனையை முற்றாக அழிக்கவும் அனைவரும் இணைந்து செயற்படுவோம் என அழைப்பு விடுக்கின்றேன் - என்றார். (அ-எ-இ)

## ரவீந்திர...

மீண்டும் பரிசீலிக்கப்படுவதாயின் அடுத்த கட்டம் தொடர்பாக உடனடியாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதித்துவம் ஊடாக நீதிமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று கோட்டை நீதிவான் இசுரு நெத்திகுமார குற்றப்புலனாய்வுத்திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இரண்டாவது சந்தேகநபராக பெயர் குறிப்பிடப்பட்டிருந்த முன்னாள் பாதுகாப்பு பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி ரவீந்திர விஜேகுணரத்னவின் விடுவிப்பு தொடர்பாக சட்டமா அதிபர், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் முன்னிலையான சட்டத்தரணி அச்சலா செனவிரத்ன மன்றுக்குத் தெரிவித்தார். இந்தச் சந்தேகநபருக்கு எதிராகப் போதுமான சாட்சிகள் இருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, பிரதிவாதிகள் தரப்பு சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள், இந்தச் சம்பவம் தொடர்பான ஆரம்பத் தகவல்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை குற்றப்புலனாய்வுப்பிரிவிடம் கோரியும் கிடைக்கவில்லையென மன்றுக்குத் தெரிவித்தனர். அவற்றைப் பரிசீலித்த நீதிவான், இதற்கு விசேட கட்டளைகள் தேவையில்லை என்றும், ஒரு வார காலத்துக்குள் அந்த ஆவணங்களின் பிரதிகளை பிரதிவாதிகள் தரப்புக்கு வழங்க வேண்டும் என்று குற்றப்புலனாய்வுப்பிரிவுக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்காக நான்காவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இனி எந்தக் காரணத்துக்காகவும் திகதி வழங்கப்படமாட்டாது. அரச சட்டத்தரணிக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விசாரணையை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கக்கோர வேண்டாம். இந்தச் சம்பவம் நடந்து நீண்ட காலம் கடந்துவிட்டது. வேறெந்த விடயத்துக்காகவும் விசாரணையைத் தள்ளிப்போட முடியாது எனத் தெரிவித்த நீதிவான், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று பிரதிநிதி ஒருவருடன் முன்னிலையாக வேண்டும் என்று குற்றப்புலனாய்வுப்பிரிவுக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-எ-இ)

## பொலிஸ்...

சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக ரன்வல சம்பந்தப்பட்ட வீதி விபத்து விசாரணையில் முறையான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என விமர்சனங்கள் எழுந்திருந்த நிலையில், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த காலங்களில் நிலவிய சுவாசப் பகுப்பாய்வு கருவிகளுக்கான தட்டுப்பாடு இந்தப் புதிய தொகுதியின் மூலம் நீங்கும். பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வீதிச் சோதனைகள் மற்றும் விபத்து நடந்த இடங்களிலேயே உடனடி சோதனைகளை முன்னெடுக்க இது உதவும்.

கருவிகள் இல்லாத சமயங்களில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது என்று அர்த்தமல்ல. அத்தகைய சந்தர்ப்பங்களில் சந்தேகநபர்கள் சட்ட மருத்துவ அதிகாரி ஒருவரிடம் முன்னிலைப்படுத்தப்படுவார்கள். அங்கு பெறப்படும் மருத்துவ அறிக்கையே நீதிமன்றத்தில் சாட்சியாகப் பயன்படுத்தப்படும் - என்றார். (அ-எ-இ)

## போதுமான...

நாட்டின் களஞ்சிய வசதிக்கு ஏற்ப 20 முதல் 30 நாள்களுக்குத் தேவையான இருப்பு பராமரிக்கப்படுகின்றது. அண்மைய அதிதீவிர வானிலை காரணமாக எரிபொருள் இருப்புகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கான எரிபொருள் விலை திருத்தம் தொடர்பாக இதுவரை எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் விலை திருத்தங்கள் தொடர்ச்சியான செயல்முறையாக முன்னெடுக்கப்படும் என்று கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே ஆங்கில ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (அ-எ-இ)

## தனக்குரிய...

நாயக்க தெரிவித்துள்ளார்.

தியத்தலாவ இலங்கை இராணுவ கல்வியியல் கல்லூரியின் கெடட் அதிகாரிகள் விடுகை அணிவகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஒவ்வொரு கடினமான சூழ்நிலையிலும் நாட்டுக்கும் மக்களுக்கும் இராணுவம் ஆற்றிய சேவை பாராட்டத்தக்கது. இலங்கை இராணுவமாக, நமது தாய்நாட்டின் மற்றும் அதன் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் அசைக்க முடியாத பொறுப்பு உங்களுக்கு உள்ளது. இந்த விடயத்தில் உங்கள் மீது எங்களுக்கு நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் உள்ளது - என்றார். (அ-எ-இ)

## வாள்வெட்டு...

யாவில் இருந்து வீரபுரம் பகுதிக்கு சென்றுள்ளனர். அவர்கள் மீது அந்தப் பகுதியை சேர்ந்த குழு ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் உயிரழந்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் செட்டிகுளம் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றது. சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்தவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படு கின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-110)

## மோட்டார்...

வந்த மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளனர். மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் தலைக்கவசம் அணியாத நிலையில், தலையில் படுகாயமடைந்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டித்வா புயலால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை விரைவுபடுத்துக



## ஜனாதிபதி பணிப்பு

**கொழும்பு,டிசெ.22**

**டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பு வதற்கு, அவர்களுக்கு வழங்கப்படும் உதவிக்கொடுப்பனவுகள் மற்றும் இழப்பீடுகளை விரைவுபடுத்தி வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகாரிகளுக்குப் பணித்தார்.**

'இலங்கையை மீளக்கட்டியமைத்தல் ' வேலைத்திட்டத்தின் கீழ் மக்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப மாவட்ட மட்டத்தில் திட்டமிடப்பட் டுள்ள வேலைத்திட்டங்கள் மற்றும் பிரச்சினைகளை ஆராய்வதற்கான விசேட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக 25 ஆயிரம் ரூபா மற்றும் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்குவதற்கான 50 ஆயிரம் ரூபா உதவிக்கொடுப்பனவை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவேண்டும். அதேவேளை வீடுகள் மற்றும் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு , மக்களை மீளக்குடியமர்த்துதல், வாழ்வாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் விரைவுபடுத்தப்பட வேண்டும். இழப்பீடு பெற உரிமை உள்ள அனைவருக்கும் நியாயத்துடனும், வெளிப்படைத்தன்மையுடனும் இழப்பீட்டை வழங்க வேண்டும். அதேவேளை அதிக ஆபத்துள்ள பகுதிகளில் இருந்து மக்களை உடனடியாக வெளியேற்றி, அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் மீள்குடியேற்ற வேண்டியது அவசியம். பெரும்போகத்துக்கு விவசாயிகளைத் தயார்ப்படுத்துவதற்காக நீர்ப்பாசனக் கட்டமைப்புகளின் புனரமைப்பு, இழப்பீடு மற்றும் விதை நெல் உள்ளிட்ட வசதிகளை வழங்குதல், சிறு வர்த்தகங்களை மீண்டும் ஆரம்பிக்க உதவுதல், மீன்பிடித் தொழிலை மீட்டெடுத்தல், பாடசாலை மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குதல், சேதமடைந்த கடவுச்சீட்டுகள் மற்றும் அடையாள அட்டைகளை மீண்டும் வழங்குவதற்கான வேலைத்திட்டம் உள்ளிட்ட நடவடிக்கைகளையும் தொடர்புடைய அதிகாரிகள் விரைவுபடுத்த வேண்டும்-என்றார். கலந்துரையாடலில் பாதுகாப்பு, விவசாயம், நீர்ப்பாசனம், நீர் வழங்கல், மீன்பிடி, போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் நிர்மாணம் ஆகிய துறைகளைச் சேர்ந்த அமைச்சுகளின் செயலாளர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் மாவட்டச் செயலர்கள் கலந்துகொண்டனர். (க-44)


## வீடு வாடகைக்கு

யாழ். நகர மத்தியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

* வைத்தியசாலை வீதிக்கு அண்மையில்.

தொடர்பு: 0777 22 00 26

(CS 30944) A

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- பலாலி வீதி 100m தூரம்
- பாடசாலை 200m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை
- 18 அடி பாதையுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 074 029 2338
076 990 3039

(CS 30946) A


## 41ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 . 12 . 1959



அரக்கரின் பிடியில்
22 . 12 . 1984

### அமரர் அமிர்தலிங்கம் செல்வக்குமாரன்

(முன்னாள் ஆங்கில ஆசிரியர்,
மன்னார் நறுவிலிக்குளம் றோ.க.த.க.பாடசாலை)

அன்பின் பிறப்பிடமாய் அறிவின் சிகரமாய்
எல்லோர்க்கும் இனியவனாய் என்றும் புன்னகையுடன்
அனைவரையும் கவர்ந்த பண்பாளனாய் வலம்வந்த
உன்னைத் துப்பாக்கிக் குண்டு கவர்ந்து 41
ஆண்டுகள் ஓடிவிட்டாலும் இன்றும் எம் கண்ணில்
எழில் வடிவாய்த் திகழும் உனை நினைந்துருகும்


**சகோதரங்கள்**

திருமதி அருந்தவரெத்தினம் கதிரமலை குடும்பம்
வி.எம்.றோட், பருத்தித்துறை.
திரு.அ.இராஜசிங்கம் குடும்பம் - (ஸ்பெயின்)
திருமதி யோகராணி குடும்பம் - (கனடா)
கலாநிதி இராசகுமாரன் குடும்பம்
தொண்டைமானாறு (நீர்வேலி)
திருமதி அமிர்தயோகம் நித்தியானந்தம் குடும்பம் - பிரான்ஸ்
திரு. அ.சிவரூபன் குடும்பம் - (பிரான்ஸ்)
திரு. அ. கமலக்கண்ணன் - (U.K)
தம்பு அமிர்தலிங்கம் குடும்பம்
(ஜப்பான் சின்னத்துரை)
வடக்குத் தெரு, தொண்டைமானாறு.

(CS 60238) A

## மரண அறிவித்தல்

தோற்றம்
30 . 05 . 1946



மறைவு
21 . 12 . 2025

### தில்லையம்பலம் நடராசன்

காரைநகர் சடையாளியை பிறப்பிடமாகவும் கலாசாலை வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நடராசன் அவர்கள் நேற்று 21.12.2025 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகனும், சிந்தாமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் செல்வரத்தினம் (கனடா), வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், முருகதாஸ் (லண்டன்), தேவதாஸ், தவராசா, ரகுபதி (கனடா), தனபால் ஆகியோரின் மைத்துனரும், சுதர்சினி (சுவிஸ்), வாசுகி, ரஜீவன் (சுவிஸ்), கிரிதரன் (Jetwing) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஸ்ரீரமணகுமார் (சுவிஸ்), தயாபரன் (சூரியன் களஞ்சியம்), சுவேதிகா (Jetwing) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிலாஷ், துளசியா, மதுரன், மிதுரா, மதுரா, ஆதித்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.12.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் திருநெல்வேலி அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.5/8, 1ம் ஒழுங்கை,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
கிரிதரன் (மகன்)
077 528 4481

(CS 30943) A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.